114—

வீட்டுமனைப் பட்டா

***1164 திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, பன்னிமடை ஊராட்சி, கணுவாய் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்திற்குட்பட்ட, கணுவாய் மலை வனப் பகுதியில் வசித்துவரும் 900 ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இணையதளம் மூலம் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்து, வனத் துறையின் அனுமதி பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழகத்தின் முதல்வர் அம்மா! எங்கள் அம்மா பாரு!
கலை அன்பிலதான் நேரு!
அவர் திறமையைத்தான் பாரு!
ஏழை மக்கள் வாழ்ந்திடவே வாரித்தந்தார் பாரு!
ஏழை மக்கள் குடியிருக்கும் பசுமை வீடு பாரு!
அவை அன்பு மலர்வீடு! இதை உரைக்கும் தமிழ்நாடு!

கொடைவள்ளல் என்றும் பாரி என்றும் புகழும் இந்த நாடு! (மேசையைத் தட்டும் ஒலி)

[2016 ஆகஸ்ட் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதி, பன்னிமடை ஊராட்சிக்குட்பட்ட, கணுவாய் மலைப் பகுதியிலே கிட்டத்தட்ட 900 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. 1981 ஆம் ஆண்டு இப்பகுதியின் அருகில் வருவாய்த் துறையின் மூலமாக கல்குவாரிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த 1992 ஆம் ஆண்டு மாவட்ட வன அலுவலரால் இப்பகுதி வனப் பகுதி அல்ல என்று கடிதம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வருவாய்த் துறை மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அப்பகுதி மக்களுக்கு பட்டா வழங்குவார்களா என்பதைக் கேட்டு அமருகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, அந்த இடம் வனத் துறைக்குச் சம்பந்தமான இடமல்ல என்ற ஒரு தகவலைச் சொன்னார்கள். அது சரியான தகவலாக இல்லை. அது போளுவாம்பட்டி மற்றும் தடாகம் ஒதுக்குக் காடுகள் என்று வகைப்படுத்தப்பட்ட வனத் துறைக்குச் சொந்தமான அவ்விடத்திலேதான் அந்த மக்கள் குடியிருந்து வருகின்றார்கள். இப்பகுதியானது ஒதுக்குக் காடுகள் என்று வகைப்படுத்தப்பட்டிருப்பினும் இப்பகுதியையொட்டி அடர்ந்த வனமோ, விலங்குகளின் அச்சுறுத்தலோ ஏதுமில்லை. அதனால், மேற்படி 7.46.5 எக்டேர் பரப்பளவு கொண்டுள்ள இடத்திலே சுமார் 910 குடும்பங்கள் வீடுகளைக் கட்டியுள்ளன. வனச் சட்ட விதிகளின்படி மேற்படி இடத்திற்கு மாற்றாக வனத் துறைக்கு இடம் வழங்கப்பட வேண்டும் என்பதால் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தோளாம்பாளையம் கிராமத்தில் க.ச.எண் 958-ல் அமைந்துள்ள வருவாய்த் துறைக்குச் சொந்தமான, 'தீர்வை ஏற்படாத தரிசு' என்ற வகைப்பாட்டில் அமைந்துள்ள இடத்தில் 14.93.0 எக்டேர் நிலம் மாற்று நிலமாக வழங்க உத்தேசிக்கப்பட்டு, இது தொடர்பாக அரசின் அனுமதி பெறும்பொருட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/நில நிருவாக ஆணையர் அலுவலகத்திற்குப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. அரசின் அனுமதி பெறப்பட்ட பின் பட்டா வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர்கள் சார்ந்திருக்கிற கோயம்புத்தூர் மாவட்டத்திலே மாண்புமிகு இதய

2016 ஆகஸ்ட் 29]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு அவருடைய கவுண்டம்பாளையம் தொகுதி உட்பட, 35,543 ஏழையெளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). வனத் துறையின் அனுமதியைப் பெற்றதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே கிட்டத்தட்ட 1,500 பட்டாக்கள் சென்ற நிதியாண்டிலே வழங்கப்பட்டிருப்பதற்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். வருகின்ற காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவானப் பார்வைக்கு எடுத்துச் சென்று பட்டாக்களைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமருகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு :** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*